**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 75/2020**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 04.11.2025 | | |
| பெயர்: | விஜயகுமார் (PW–1 Cross ) | தகப்பனார் பெயர்: | திருநாவுக்கரசு |
| கிராமம்: | மருவத்தூர் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 61/2025 |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 04.11.2025**

**(ஆரம்பித்த நேரம்– 12.29)**

1. எனக்கு விவசாயம் தான் பிரதான தொழில். எனக்கு சுமார் 10 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த 10 ஏக்கரும் குத்தகை சாகுபடி நிலம்தான். பொதுவாக ஒரு ஏக்கருக்கு நன்றாக நெல் விளையும்போது சுமார் 35லிருந்து 40 மூட்டை வரை மகசூல் வரும். நான் குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திற்காக ஒரு ஏக்கருக்கு சுமார் 1 ½ மூட்டை குத்தகை அளப்பேன். தற்போது நெல் ஒரு மூட்டைக்கு சுமார் ரூ. 1600/– வரை விலை போகிறது.

2. விவசாயத்தின் மூலம் எனக்கு ஒரு ஏக்கருக்கு ஆண்டிற்கு சுமார் ரூ. 40,000/– வரை வருமானம் கிடைக்கும். ஒரு ஏக்கருக்கு நெல் விதைப்பதற்கு, களை எடுப்பதற்கு என சுமார் ரூ. 10,000/– வரை செலவாகும். பிரதிவாதி எனது கிராமத்தை சேர்ந்தவர். பிரதிவாதிக்கு கடனுறுதி சீட்டில் உள்ள தொகையை கடனாக கொடுப்பதற்கு எனக்கு போதுமான பொருளாதார வசதி இல்லை என்றால் சரியல்ல.

3. 10 ஏக்கருக்கு விவசாய செலவுகள் போக சுமார் 1 ½ லட்சம் தான்

கிடைக்கும் என்றாலும், அந்த 1 ½ லட்சம் எனது குடும்ப செலவிற்கே போதாது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் சாட்சி கையொப்பம் செய்துள்ளவர்களுக்கு முகவரி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் முகவரி குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.1 ல் எங்களது ஊரைச் சேர்ந்த நபர்கள் யாராவது கையெழுத்து செய்துள்ளார்களா என்றால் இரு சாட்சிகளுமே எங்களது ஊரைச் சேர்ந்தவர்கள் தான்.

4. வா.சா.ஆ.1 ல் எனது தெருவை சேர்ந்தவர்தான் கையெழுத்து செய்துள்ளார். பிரதிவாதி தெருவை சேர்ந்த எவரும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான் . நான் கடன்கொடுத்தது சம்மந்தமாக பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். நான் அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அனுப்பியிருந்தால் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

5. எனக்கு பிரதிவாதிக்கு ரூ. 15,000/- கொடுக்குமளவிற்கு பொருளாதார வசதியில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் பிரதிவாதி கையெழுத்து செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக போலியாக கையெழுத்திட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடன் வாங்குமளவிற்கு நட்பு கிடையாது என்றால் சரியல்ல. நான் கிராமத்தில் ரூ.1000/-, ரூ. 2000/- அளவிற்குதான் வட்டிக்கு பணம் கொடுப்பேன் என்றாலும் அவ்வாறு கொடுத்தபிறகு கூடுதல் பணத்திற்காக வழக்கு தாக்கல் செய்வேன் என்றாலும் சரியல்ல.

6. நான் பிரதிவாதிக்கு வட்டிக்குதான் கடன் கொடுத்துள்ளேன். பிரதிவாதி இதற்கு முன்பு என்னிடம் வட்டிக்கு பணம் வாங்கியுள்ளாரா என்றால் இல்லை, இதுதான் முதல் முறை. பிரதிவாதி தினக்கூலி வேலை தான் செய்து வருகிறார், அதனால் அவருக்கு ரூ. 15,000/- கொடுக்குமளவிற்கு அவர்மீது எனக்கு நம்பிக்கையில்லை என்றால் சரியல்ல. நானும் பிரதிவாதியும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் கொடுத்த பணத்தை கேட்பதற்காக யாரையேனும்

அழைத்து சென்றேனா என்றால் அழைத்து சென்று கேட்டுள்ளேன். அவ்வாறு யாரை அழைத்து சென்றேன் என்றால் தற்போது ஞாபகமில்லை.

7. யாரை அழைத்து சென்றேன் என்று கூறினால் உண்மை நிலவரம் தெரிந்துவிடும் என்பதால் நான் ஞாபகமில்லை என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் விவசாயம் செய்து கொண்டு நீதிமன்றத்தில் பலபேர் மீது வட்டிக்கு பணம் கொடுத்ததாக வழக்கு தாக்கல் செய்து பணம் பறிப்பதுதான் என்னுடைய வேலை என்றால் சரியல்ல. என்னைவிட அதிகமாக நிலம் வைத்திருப்பவர்களுக்கு வருமானம் குறைவாக தான் வரும், ஆனால் எனக்கு மட்டும் வருமானம் அதிகமாக வருகிறது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8. என்னிடம் ரூ.1000/–, ரூ.2000/– வாங்கிக்கொண்டு கடனுறுதி சீட்டு கொடுத்தவர்களிடம் நான் அதிக தொகைக்கு பணம் கொடுத்ததாக வழக்கு தாக்கல் செய்வதுதான் எனது வழக்கம் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவ்வளவாக பலம் இல்லாத ஏழை கூலித்தொழிலாளி என்பதால் அவர் மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பாத காரணத்தால்தான் பிரதிவாதி கட்சியை பதிலறிவிப்பில் கூறவில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.53)**